வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06
09.10.2025 வியாழக்கிழமை
இதழ் : 282
பக்கங்கள் : 08




*மனித உரிமைகள் பேரவையில்*

## வாக்கெடுப்பைக் கோருவதற்கு அரசுக்கு முதுகெலும்பு இல்லையா?

### நாமல் ராஜபக்ஷ சபையில் கேள்வி

கொழும்பு, ஒக்ரோபர் 09

**மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் இலங்கை விவகாரத்தில் வாய் மூலம் எதிர்ப்பு தெரிவித்தபோதும் வாக்கெடுப்பைக் கோரவில்லை. வாக்கெடுப்பைக் கோர அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இல்லையா? பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக உள்ளன. யாரை நீங்கள் மகிழ்விக்கப் போகிறீர்கள். தமிழ் புலம்பெயர் அமைப்புக்களையா அல்லது விடுதலை புலிகள் ஆதரவாளர்களையா? - இவ்வாறு சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரசாங்கத்தின் முன்னேற்றம் தொடர்பில் கேள்விகள் எழுகின்றன. ஒவ்வோர் அமைச்சும் இதுவரையில் அடைந்துள்ள முன்னேற்றம் என்ன? கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நிதியில் எவ்வளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. மக்கள் அடைந்த நன்மை என்ன என்பதனையும் கூற வேண்டும். கடந்த காலங்கள் தொடர்பில் பேசிக்கொண்டிருக்காமல் வேலைத் திட்டங்களைப் பாருங்கள்.

ஒவ்வொரு வாரமும் புது விடயங்கள் பேசப்படுகின்றன. இப்போது, பொலிஸ் ஆணைக்குழு தொடர்பான

07



*அரியாலையில் குப்பைமேடு:*

## ஏ-9 வீதியை மறித்து மக்கள் நேற்று எதிர்ப்பு போராட்டம்

- த. பிரதீபன், பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 09

அரியாலையில் குப்பை மேடு அமைக்கும் நல்லூர் பிரதேச சபையின் திட்டத்துக்கு எதிராக அந்த ஊர் மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அவர்கள் ஏ-9 வீதியை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றைய தினம் அரியாலை கிழக்கு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, அவர்கள் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் போராட்ட இடத்துக்கு வரவேண்டும் என்று கூறி ஏ-9

07

*மனித உரிமைகள் மீறல்:*

## இலங்கையை பொறுப்புக்கூற செய்வது மீறலில் ஈடுபடும் நாடுகளுக்கு பாடமாகும்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

சிட்னி, ஒக். 09

"இலங்கையை பொறுப்புக்கூற வைப்பது எந்தவொரு நாடும் இது போன்ற மனித உரிமைகள் மீறலிலிருந்து தப்ப முடியாது என்ற செய்தியை உலக சமூகத்துக்கு அனுப்பும்", - இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய உப இயக்குநர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

அத்துடன், கவனிக்கப்படாத போர்க் குற்றங்கள் எதிர்கால அட்டூழியங்களுக்கு ஆபத்தான முன்னுதாரணத்தை அமைக்கின்றன என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு போரில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அவலங்களை மையப்படுத்தி அவுஸ்திரேலிய

07

## மன்னார் காற்றாலை விவகாரம் கலந்துரையாடல் மூலமாக தீர்வு!

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

மன்னார், ஒக். 09

மன்னார் காற்றாலை மின்சார திட்டத்துக்கு கலந்துரையாடல் மூலமாகத் தீர்வு காண முடியும் என்று வடக்கு ஆளுநர் நா. வேதநாயன் தெரிவித்துள்ளார்.

வடக்கு ஆளுநர் நேற்று மன்னார் பொது மருத்துவமனைக்கு களப்பயணம் சென்றிருந்தார். இதன்போது, செய்தியாளர்கள் மன்னார் காற்றாலை திட்டம் தொடர்பில் கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் அளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "காற்றாலை விடயம் பேசித்

07

## 54 ஆயிரம் முப்படையினர் பணிக்கு திரும்பவில்லை

கொழும்பு, ஒக். 09

முப்படைகளை சேர்ந்த அதிகாரிகள் உட்பட 54 ஆயிரம் பேர் விடுமுறை பெறாமல் பணியை விட்டு வெளியேறியுள்ளனர் என்று பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

07


## நாட்டில் 10 சதவீத மக்கள் மனநோய்களால் பாதிப்பு

கொழும்பு, ஒக். 09

நாட்டின் மக்கள் தொகையில் 10 சதவீதமானோர் பல்வேறு மனநோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 2 வீதமானவர்கள் கடுமையான மனநல பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2024 ஆம் ஆண்டில் சுமார் 37

07



## மகிந்தவின் வீட்டுக்கு முன்பாக பிக்கு ஒருவர் உண்ணாவிரதம்!

கொழும்பு, ஒக். 09

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு நீக்கப்பட்ட பாதுகாப்பை மீள வழங்கக் கோரியும் பிக்கு ஒருவர் உண்ணாவிரத போராட்டம் நடத்துகிறார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தங்காலை கார்ல்டன் இல்லம் முன்பாகவுள்ள டி. எஸ். சேனநாயக்கவின் சிலை அருகே அமர்ந்து அவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் அவர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். (ஐ)

## ஜெனிவா தீர்மானம் இன்று சிறப்பு அறிக்கை!

கொழும்பு, ஒக். 09

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அண்மைய தீர்மானம் குறித்து இன்றைய தினம் சிறப்பு அறிக்கை ஒன்றை அரசாங்கம் வெளியிடவுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், அது தொடர்பில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக அந்த அறிக்கையை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்றைய தினம் பாராளுமன்றத்தில் வெளியிடுவார்.

07

## மின்சார கட்டண திருத்தம் இறுதி முடிவு எடுக்கவில்லை

### அமைச்சர் நளிந்த அறிவிப்பு

கொழும்பு, ஒக். 09

மின்சார கட்டண திருத்தம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மின்சார கட்டணத்தை குறைப்பதை

07

## வடக்கு ஆசிரியர்கள்மீது அரசியல் பழிவாங்கல்

### இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 09

வடக்கு மாகாண கல்வி திணைக்களம் தற்போது வெளியிட்ட இடமாற்றப் பட்டியலில் அரசியல் தலையீடு காரணமாக ஆசிரியர்கள் பழிவாங்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

தொண்டைமானாறு தடுப்பணை:

# வெள்ள பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாக்க நிலைதகு திட்டம் தேவை

## வடக்கு ஆளுநரிடம் வலி. கிழக்கு தவிசாளர் கோரிக்கை

வடமராட்சி, ஒக். 09

தொண்டைமனாறு உவர் நீர்த் தடுப்பணை திட்டத்தை வரவேற்பதாகவும் இந்தத் திட்டத்தால் வருடாவருடம் வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்ளும் மக்களை காப்பாற்றுவதற்கான நிலைதகு திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனிடம் வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் பணிமனை நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே தியாகராஜா நிரோஷ் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கான உவர் நீர்த்தடுப்பு திட்டம் இங்கு செயல்படுத்தப் படுவதனால் எமது மக்களில் ஆயிரக்கணக்கானவர்கள் வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்கிறார்கள். அவ்வாறாக, மக்கள் பாதிக்கப்படும் போதும் மக்களை நாம் நிலத்தடி நீர்ப்பாதுகாப்பு திட்டம் என்ற ஒரே காரணத்துக்காக பாதிப்புகளை சகித்துவாழ அரச கட்டமைப்பு கோருகிறது.

நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் திட்டத்துடன் இணைந்த உப திட்டங்கள் வகுக்கப்பட்டு அதன்வாயிலாக மக்களை வெள்ளப் பாதிப்பில் இருந்து நாம் பாதுகாக்க வேண்டும்.

அவ்வாறான திட்டங்கள் நிலைத்தகு சிந்தனையுடன் நடைமுறைப்படுத்தப் படும் போது மக்கள் எதிர்கொண்டுள்ள வெள்ளப் பாதிப்புக்கு தீர்வு காணலாம்.

ஒவ்வொரு வருடமும் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, ஆவரங்காலின் ஒரு பகுதி, வாதரவத்தை, புத்தூர் கிழக்கு என வலி. கிழக்கு பிரதேசத்தின் பல பகுதிகள் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இதில், நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடர் நிலையை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான நிலையில், மாகாண சபைகூட தனது குறித்தொதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்படி மக்களுக்கு சிறந்த திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி மக்களின் பாதிப்புகளைக் குறைக்கலாம். அதற்கு ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் தமது பகுதிக்கும் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் திட்டம் நன்மையளிக்கிறது என்ற அடிப்படையில் நிதிகள் மாகாண மட்டத்தில் பகிரப்படும்போது விட்டுக்கொடுப்புகளை செய்ய முடியும்.

மேலும், உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச கொடையாளர்களின் மேற்படி உவர் நீர்த் தடுப்பணை நன்னீர்த்திட்டத்தை பேணுவதனால் பாதிக்கப்படும் மக்களுக்கான பாதிப்பை நிவர்த்தி செய்யத் தக்க திட்டத்தை மேற்கொள்ள நிதி கோரிக்கையை ஆளுநர் முன்வைக்க வேண்டும் என நிரோஷ் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த ஆளுநர் நா. வேதநாயகன், சர்வதேச திட்டங்களின் வாயிலாக பாதிக்கப்படும் மக்களை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

# தேசிய தமிழ்த்தின போட்டியில் கரணவாய் மாணவி முதலிடம்



வடமராட்சி, ஒக். 09

அகில இலங்க தமிழ்த் தினப் போட்டியில் கட்டுரை எழுது தல் போட்டியில் கரணவாய் மகா வித்தியாலய மாணவி முதலிடம் பெற்றுள்ளார்.

பிரிவு 3இற்கான பிரிவில் யோகநேசன் ரம்மியா என்ற மாணவியே முதலிடம் பெற்று சாதித்துள்ளார்.

அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மருந்துகளுடன் மன்னாரில் சந்தேகநபர் ஒருவர் கைது!

மன்னார், ஒக். 09

நாட்டுக்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மருந்துகள், அழகு சாதனப் பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் மன்னாரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் - கீரி கடற்கரை பகுதியில் திங்கட்கிழமை கடற்படையினர் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட 56 ஆயிரத்து 870 மருந்து மாத்திரைகள், அழகு சாதனப் பொருட்களும் இதன் போது கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் தாழ்வுபாடு பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். சந்தேகநபரும் கைப்பற்றப்பட்ட மருந்துகள், அழகு சாதனப் பொருட்களுடன் சட்ட நடவடிக்கைக்காக கடற்படையினரால் யாழ்ப்பாணம் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இளங்கலைமாணி ஆய்வு மாநாடு யாழ். பல்கலையில் நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஒக். 09

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீடத்தின் ஐந்தாவது இளங்கலைமாணி ஆய்வு மாநாடு நேற்று புதன்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இதில், முதன்மை விருந்தினராக, யாழ்ப்பாண பல்கலைக் கழகத் துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா பங்கேற்றார். கலைப் பீடாதிபதி சி.ரகுராம் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத் துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ். சந்திரபோஸ் பங்கேற்றார்.

கலைப் பீடத்தின் இளங்கலைமாணி ஆய்வு மாநாடு ஐந்தாவது ஆண்டாக இந்த ஆண்டு நடத்தப்பட்டது. இதில், "வெவ்வேறு துறைகளை இணைத்து மாற்றங்களை வலுவூட்டுவதற்காக அறிவைச் செயற்படுத்தல்" என்னும் தொனிப்பொருளில், 16 ஆய்வுத் தடங்களில் நடைபெற்றது.

இளங்கலைமாணி பட்டக் கற்கையின் இறுதியாண்டு மாணவர்கள் நிறைவுறுத்திய ஆய்வுகளின் அளிக்கையாக இந்த மாநாடு அமைந்திருந்தது. அவை ஆய்வுச் சுருக்கங்களாக, மாநாட்டின் மூலமும் வெளியிடப்பட்டன. (ஐ)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 09

ஊரெழு கணேச வித்தியா சாலை பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இராஜா ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபை உரும்பிராய் உப பணிமனை பொறுப்பதிகாரி சி. சைலேஸ்வரன் பங்கேற்கவுள்ளார். (ஐ)

# மன்னார் மருத்துவமனைக்கு வடக்கு ஆளுநர் களப்பயணம்

மன்னார், ஒக். 09

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக வடக்கு மாகாண ஆளுநர் என். வேதநாயகன் தலைமையிலான விசேட குழுவினர் நேற்று களப் பயணம் சென்றிருந்தனர்.

இதில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மன்னார் பொது மருத்துவமனையின் அத்தியட்சகர், உதவி பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வட மாகாண பிரதம செயலாளர், வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வட மாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, மருத்துவமனையில் உள்ள பல்வேறு குறைபாடுகள் குறித்து ஆராயப்பட்டன. குறிப்பாக, மருத்துவ மனையின் தேவைகள், மருத்துவமனையில் உள்ள அதிகமான கட்டடங்கள் பழமை வாய்ந்த கட்டடங்களாக உள்ளமையால் அவற்றை மாற்றி அமைத்தல், நவீன வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

மேலும், நோயாளிகள் எதிர்கொள்ளும் சிரமங்கள், அது விடயத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மாகாண நிதியில் இருந்து திட்டம் ஒன்றை வகுத்து 2026ஆம் ஆண்டுக்கான நிதியில் இருந்து 3 மாடி கட்டடம் ஒன்றை அமைக்க நிதி ஒதுக்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 09

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்த திருவிளையாடல் புராண சிறப்பு சொற்பொழிவு தொடர் - 26 நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோதி முனிவர் குருபூசையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும் சைவப்புலவர் செ. த. குமரன் "வளையல் விற்ற படலம்" என்னும் சொற்பொழிவும் நடைபெறும். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

# அரியாலை மக்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றனர்!

## நல்லூர் பிரதேச சபை தவிசாளர்

யாழ்ப்பாணம், ஒக். 09

அரியாலையில் திண்ம கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையம் தொடர்பில் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பொய்யான தகவல்களை வழங்கி மக்களை பிழையாக வழி நடத்துகின்றனர் என்று நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப. மயூரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் திண்ம கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையம் அரியாலையில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக நேற்று அந்த ஊர் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்ட இடத்துக்கு சென்ற தவிசாளரிடம் மனு ஒன்றை போராட்டக்காரர்கள் கையளித்தனர். இதன்பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "நல்லூர் பிரதேச சபையின் திண்ம கழிவுகளை சேகரிக்கும் முகமாக அரியாலை பகுதியில் சகல அனுமதிகளை பெற்றே பிரதேச சபை செயலாளரால் கட்டுமான பணிகள் முன்னெடுக்கப்பட்டன

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கூட இந்த இடத்திற்கான அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. அதனை தொடர்ந்து பிரதேச செயலாளரால் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் திண்ம கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையமான காரைக்கால் பகுதியில் இருந்த நிலையத்தில் தற்போது அவற்றின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அரியாலையில் இந்த இடம் பொருத்தமான இடமாக காணப்பட்டமையால் அதில் திண்ம கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையம் அமைத்துள்ளோம். இது, குப்பைகளை கொட்டும் இடமில்லை. தரம் பிரிக்கும் இடம். இந்த மக்களை சில குப்பைகளை கொட்டும் இடம் என கூறி குழப்பியுள்ளனர்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பொய்யான தகவல்களை மக்களை பிழையாக வழி நடத்துகின்றனர். வட மாகாண ஆளுநரிடம் திண்ம கழிவகற்றலுக்கு பொருத்தமான திட்டத்தைத் தீட்டுமாறு கோரியுள்ளோம். அவ்வாறான திட்டங்கள் நடைமுறைக்கு வந்தால் இந்த இடத்தை நாம் தொழில் பேட்டையாக மாற்றி அமைப்போம்.

இதொரு சுற்றுலா தளம் என்கின்றார்கள். இது ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள மயானத்துக்கு அருகிலேயே அமைக்கப்பட்டுள்ளது. திண்ம கழிவுகளை அகற்ற வேறு இடங்கள் எமக்கு கிடைக்கப்பெற்றால் இந்த இடத்தை தொழில் பேட்டையாக மாற்றி அமைப்போம் என உறுதி அளிக்கிறோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.10.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அர்த்தமற்ற ஒற்றையாட்சி சண்டைகள்!

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கடசியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைக் கோருவதானது தமிழர் பிரச்னையை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்காகவே என்று குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறான குற்றச்சாட்டை அனைத்து கட்சிகள்மீதும் சுமத்துவது அவரின் வழமையான அரசியல் பிரசாரங்களில் ஒன்று.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஒன்றுதான் ஒற்றையாட்சியை எதிர்க்கும் கட்சி என்பதே அவர்களுடைய நம்பிக்கை. ஆனால், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி உட்பட அனைத்துத் தமிழ் கட்சிகளுமே இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை ஏற்றுக்கொண்டு அதற்கமைவாக செயல்படுகின்றன. ஒற்றையாட்சிக்கு அமைவாகவே பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளில் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றனர்.

ஆயுத இயக்கங்கள் மட்டுமே இலங்கையின் ஒற்றையாட்சியை எதிர்த்து செயல்பட்டிருந்தன. அதுவும்கூட அவர்கள் ஆயுத இயக்கமாக இருந்தவரைக்கும்தான். இறுதியாக இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு எதிராக செயல்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் மட்டும்தான். ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த போதிலும்கூட இலங்கையின் கட்டமைப்புகளைப் பயன்படுத்துவதை எதிர்த்திருக்கவில்லை - அதனையும் கையாள வேண்டும் என்னும் அடிப்படையிலேயே செயல்பட்டிருந்தனர். ஒருபுறம் போராட்டப் பாதையில் பயணித்தபோதிலும்கூட, மறுபுறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றையாட்சிக்குள் முடிந்தவரையில் இயங்குவதை ஊக்குவித்தனர் - அதனையும் பயன்படுத்தினர்.

நிலைமை இவ்வாறிருக்கின்றபோது, நாங்கள் மட்டும்தான் ஒற்றையாட்சியை எதிர்க்கிறோம் என்று வாதிடுவதானது முதலாவது அரசியல் அறியாமை. இரண்டாவது போலித்தனம். இந்த இரண்டும்தான் ஒற்றையாட்சிக்கு எதிராகத் தாங்கள் மட்டுமே போராடுவதான கற்பனைக்குள் சீவிக்கத் தூண்டுகிறது.

ஒற்றையாட்சி நீக்கப்பட வேண்டும் என்பதுதான் அனைவரின் விருப்பமும் - தமிழ் அரசுக் கட்சியும் அதனைத்தான் கோரி வருகிறது. அதற்காகக் குரல் கொடுக்கும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கிறது. ஆனால், ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஒற்றையாட்சிக்கு எதிராகப் போராடிய வரலாற்றைக் கொண்ட கட்சியல்ல. அதன் ஒற்றையாட்சிக்கு எதிரான குரல் என்பது மிகவும் சமீபத்தைய பாய்ச்சலாகும். அதுவும்கூட, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்னும் பெயரில்தான் அதன் ஒற்றையாட்சி எதிர்ப்பு அமைந்தது. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்னும் பெயரில் ஒற்றையாட்சியை எதிர்க்க முடியாமையால்தான் புதியதொரு பெயரும் தேவைப்பட்டது.

அடிப்படையில் தமிழ் கட்சிகள் தங்களுக்குள் ஒற்றையாட்சிச் சண்டைகளில் ஈடுபடுவதானது. அடிப்படையிலேயே தேவையற்ற ஒன்று - அரசியல் ரீதியில் பயனற்ற ஒன்று. ஏனெனில், அனைத்துக் கட்சிகளுமே ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள்தான் இருக்கின்றன. கண்ணாடி வீட்டுக்குள் நின்றவாறு எங்களில் யார் கல் எறிவதில் சிறந்தவர்கள் என்று சண்டையிடுவதானது போலித்தனமானது.

### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நட்டஈடு:

## ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 09

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனத்திடமிருந்து நட்டஈட்டைப் பெறுவது தொடர்பான உயர் நீதிமன்றத்தின் அண்மைய தீர்ப்பு குறித்து ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுடன் கலந்துரையாடலை மேற்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களம் அனுமதி கோரியுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் பல முக்கியமான உத்தரவுகள் உள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. 361 பக்கங்கள் கொண்ட இந்தத் தீர்ப்பு, கப்பல் நிறுவனம் மற்றும் பல அரசாங்க நிறுவனங்களுக்கும் பல்வேறு உத்தரவுகளை வழங்குகிறது.

கடல்சார் பேரழிவால் ஏற்பட்ட பாரிய சுற்றுச்சூழல் பாதிப்புக்காக, எக்ஸ்பிரஸ் பேர்ள் நிறுவனம் ஓராண்டுக்குள் 100 கோடி அமெரிக்க டொலர் நட்டஈடு செலுத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனினும், குறித்த கப்பல் நிறுவனம் இந்த நட்டஈட்டை செலுத்துவதற்கு மறுப்பு தெரிவித்திருந்தது.

இந்தநிலையிலேயே குறித்த தீர்ப்பில் உள்ள உத்தரவுகளைச் செயல்படுத்துவதற்கும், அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்கும் ஜனாதிபதி மற்றும் தொடர்புடைய ஏனைய பங்குதாரர்களுடன் கலந்துரையாட உள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

வழங்கப்பட்டுள்ள நஷ்டஈட்டுத் தொகையை முழுமையாக மீட்டு எடுப்பதை உறுதி செய்வதற்காகவும், தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும், தற்போது தீர்ப்பை விரிவாக மீளாய்வு செய்து வருவதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் கூறியுள்ளது. (அ)

## 2 ஆயிரம் பேருக்கு 12 ஆம் திகதி வீட்டுரிமை பத்திரம் கிடைக்கும்!

கொழும்பு, ஒக். 09

மலையக மக்களுக்கான இந்தியாவின் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் 4 ஆம் கட்டமாக 4 ஆயிரத்து 700 பயனாளிகளுக்கு வீடுகளை கையளிக்க திட்டமிட்டுள்ளோம். இதன் முதற்கட்டமாக 2 ஆயிரம் வீட்டு அலகுகளுக்குரிய உரிமைப் பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் பண்டாரவளையில் நடைபெறும்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இந்த தகவலை பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

எமது மக்களுக்காக இந்திய அரசாங்கத்தால் 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. இந்த 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் 4 ஆம் கட்டமாக 4 ஆயிரத்து 700 பயனாளிகளுக்கு வீடுகளை கையளிக்க திட்டமிட்டிருந்தோம். இதன் முதற்கட்டமாக 2 ஆயிரம் பேருக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி ஜனாதிபதியால் பண்டாரவளையில் வைத்து கடிதங்கள் கையளிக்கப்படும். 10 பேர்ச்சஸ் காணியும், அந்த காணிக்குரிய உரித்தும் அன்றைய தினம் வழங்கப்படும். இந்நிகழ்வானது மலையக மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் - என்றார். (அ)

## அஞ்சல் பெட்டியிலிருந்து 53 தோட்டாக்கள் மீட்பு!

கொழும்பு, ஒக். 09


வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த அஞ்சல் பெட்டிக்குள்ளிருந்து 53 துப்பாக்கி தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இரத்தினபுரி, மத்தேகொடை பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை நடத்திய சோதனையிலேயே இந்தத் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன.

ரி - 56 ரக துப்பாக்கி தோட்டாக்கள் - 47, 9 எம். எம். ரக துப்பாக்கி தோட்டாக்கள் 6 என 53 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன.

தோட்டாக்கள் கண்டு பிடிக்கப்பட்ட வீடு ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு சொந்தமானது என்று தெரிய வருகிறது. மேலதிக விசாரணைகளை மத்தேகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 09 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 23
நல்ல நேரம் : 10.30 - 12.20
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : திருதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். இனிமையான நாள்.

**மிதுனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். முயற்சிக்ள் பலிதமாகும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களோடு வளைந்து கொடுத்துப்பது நல்லது. நேர்மறை எண்ணங்கள் வரும் நாள்.

**கன்னி**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களோடு இருந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும்.

**தனுசு**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். பழைய கடனைப் உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**மகரம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாககாணப்படுவீர்கள். சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. உத்தியோகத்தில் பனிப்போர் வந்து நீங்கும்.

# பிரபல விடுதிகளின் பெயர்களில் இளைஞர்களிடம் பணம் மோசடி

யாழ்ப்பாணம், ஒக். 08

யாழ்ப்பாணத்தின் பிரபல விடுதிகளின் பெயர்களை பயன்படுத்தி பண மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று தெரிய வந்துள்ளது.

இது குறித்து மேலும் அறிய வருபவை வருமாறு,

வட்ஸ் அப், வைபர், பேஸ்புக் மற்றும் இணையம் மூலமாக பிரபல விடுதிகளில் பெண்களுடன் உல்லாசமாக இருக்க முடியும் என்றும் அதற்கு கட்டணமாக 10 ஆயிரம் ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை வசூலிக்கப்படும் எனவும் சில பெண்களின் முகம் மறைக்கப்பட்ட படங்களுடன் விளம்பரம் பிரசுரமாகியுள்ளது.

இதனை நம்பி விளம்பரத்திலுள்ள கைபேசி இலக்கங்களுக்கு சிலர் தொடர்பு கொண்டுள்ளனர். அவ்வாறு தொடர்பு கொண்டவர்களிடம் பணம் வசூலிக்கப்பட்டு, குறித்த விடுதிக்கு வருமாறு கூறப்படும்.

அங்கு சென்ற பின்னரே அவர்களுக்கு தாம் ஏமாற்றப்பட்டமை தெரிய வந்தது. குறிப்பிட்ட கைபேசிக்கு மீண்டும் அழைப்பு எடுத்தால் அது செயலிழந்து காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய தயங்குவதால் இவ்வாறான மோசடிகள் தொடர்கின்றன.

இதேநேரம், குறித்த மோசடி கும்பலின் செயல்பாடுகளால் தமது விடுதிகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதாக அந்த விடுதிகளின் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளதுடன், பொலிஸார் இது விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் பாஷையூரில் இளைஞர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 09

பாஷையூரில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து, மூன்று வாள்கள், கைபேசி என்பனவும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் 24 வயதான குறித்த சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக தலைமறைவாக இருந்த குறித்த சந்தேக நபருக்கு எதிராக குற்றச் செயல்கள் தொடர்பிலும் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# மாகாண சபைகள் தேர்தலை அரசாங்கம் நடத்தவேண்டும்!

## றிஷாத் பதியுதீன் எம். பி.

வவுனியா, ஒக். 09

"மாகாண சபைகள் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும். அந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று ஜனநாயகக் கட்சிகள் எல்லாம் ஒன்று கூடி அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுத்திருக்கின்றன." என றிஷாத் பதியுதீன் எம். பி. தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகர சபை கலாசார மண்டபத்தில் தமிழ், சிங்கள மொழி பேசும் 20 தம்பதியருக்கு பதிவுத் திருமணம் செய்து வைத்த நிகழ்வில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தின் செயல்பாடுகளால் நானும் பாதிக்கப்பட்டேன். இதேபோல், பலர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாடு குட்டிச்சுவராகி இருக்கிறது.

தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

தூய விசாரணையின்பின் அவர்கள் நீதியின் முன்நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதை நானும் விரும்புகிறேன். மாகாண சபைகள் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும். அந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று ஜனநாயகக் கட்சிகள் எல்லாம் ஒன்றுகூடி அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுத்திருக்கின்றன.

மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்தால் தேர்தல் கால தாமதமாகும். எனவே, பழைய முறைமையின் பிரகாரம் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தை நாம் வலியுறுத்தியுள்ளோம். அவ்வாறு செய்வதானால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் உள்ள அரசாங்கத்துக்கு இது இலகுவானது - என்றார். (ஐ -10)

# வட்டு. இந்துவில் ஆசிரியர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 09

சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வானது நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நடைபெற்றது.

இதன்போது ஆசிரியர்கள் மாலைகள் அணிவிக்கப்பட்டு மாணவர்களால் கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து மாணவர்களை மகிழ்விக்கும் வகையில் ஆசிரியர்களும் கலை நிகழ்ச்சிகளை ஆற்றினர்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பதில் அதிபர் மயூரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் கலந்துகொண்டனர். (அ-05)



# சர்வதேச சிறுவர் தினத்தினையொட்டி ஏழாலையில் பொருட்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 09

ஏழாலை தெற்கு மயிலங்காடு கிராமத்தில் உள்ள சிறீ முருகன் முன்பள்ளியில் கடந்த திங்கட்கிழமை சிறுவர் மற்றும் ஆசிரியர் தினங்களையொட்டி கலை நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வு ஏழாலை தெற்கு மயிலங்காடு கிராமத்தில் உள்ள கலாச்சார அபிவிருத்தி ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்றது.

சிறீ முருகன் முன்பள்ளியின் வேண்டுகோளுக்கு இணங்க, ஜேர்மன் நாட்டின் லுவிக்ஸ்பர்க் பிரதேசத்தில் வசிக்கும் கந்தசாமி சந்திரன் வழங்கிய நிதியுதவியின் ஊடாக சமூக மேம்பாட்டு கழகத்தினர் தேவையான பொருட்களை வழங்கினர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏழாலை சிறீ முருகன் வித்தியாலயத்தின் ஓய்வுநிலை அதிபர் சைவப்புலவர் செல்லையா பரமேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக சமூக மேம்பாட்டுக் கழகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் இ.தயாபரன், சமூக செயற்பாட்டாளர் ப.சிறீதரன்ம், கௌரவ விருந்தினர்களாக வலி. தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் க.அபராசுதன், மயிலங்காடு கலாசார ஒன்றியச் செயலாளர் நா.ரமேஷ், சிறீ முருகன் சனசமூக நிலையத்தின் பொருளாளர் கி.இராஜசேகர், சிறீ முருகன் அறநெறிப் பள்ளி ஆசிரியர் கு.யாம்சனா ஆகியோருடன் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன இலக்கத் தகடு வழங்கும் பணியில் தொடர்ந்தும் தாமதம்!

## சபையில் ஒப்புக்கொண்டார் அமைச்சர்

கொழும்பு, ஒக். 09

**புதிய வாகன இலக்கத் தகடுகளை வழங்கும் பணியில் ஏற்பட்டுள்ள தாமதத்தை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று பாராளுமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.**



இது தொடர்பாக சபையில் எழுப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், 2025 செப்ரெம்பர் 30 நிலவரப்படி, மொத்தம் 165,512 வாகன இலக்கத் தகடுகள் இன்னும் வழங்கப்படவில்லை-என்றார்.

இது தொடர்பாக மேலும் தெளிவுபடுத்திய அமைச்சர்,

நாங்கள் ஆரம்பத்தில் திட்டமிட்டதை விட வாகன இலக்கத் தகடுகளை வழங்குவது மிகவும் தாமதமானது.

புதிய இலக்கத் தகடுகளில் ஏழு சிறப்பு பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன.

இலங்கையில் இந்த அம்சங்களை சோதிக்கும் பணியை மொறட்டுவ பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்தோம்.

இந்த செயல்முறைக்கு அவர்கள் சுமார் மூன்று மாதங்கள் எடுத்துக் கொண்டனர்.

எனினும், ஏழு அம்சங்களில் ஆறு அம்சங்களை மட்டுமே அவர்களால் சரிபார்க்க முடிந்தது.

எனவே, ஏழாவது அம்சத்துக்காக நாங்கள் சர்வதேச சோதனையை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

அதுதான் இந்த தாமதத்துக்கு முக்கிய காரணம்.

பாதுகாப்பு அளவை மேம்படுத்த நாங்கள் எடுத்த முயற்சிகளும் இதன் விளைவாக தாமதத்திற்கு பங்களித்தன.

இதனிடையே, புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் உள்ள சிக்கல்கள் ஒக்ரோபர் 18 ஆம் திகதிக்குள் தீர்க்கப்படும்-என்றார். (அ)

# இரசாயனப் பொருளை உட்கொண்ட 7 மாணவர்கள் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஒக். 09

தம்புள்ளை பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் ஆய்வகத்தில் காணப்பட்ட இரசாயனப் பொருளை தவறுதலாக உட்கொண்டதால் ஏழு பாடசாலை மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் ஐந்து சிறுவர்களும் இரண்டு சிறுமிகளும் அடங்குவர்.

அவர்கள் தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய பாடசாலை விடுமுறை நாட்களில் பாடசாலை ஆய்வகம் உடைக்கப்பட்டு, ஆய்வகத்திலிருந்து சில பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இதையடுத்து, ஆய்வகத்தின் தரையில் சிதறிக்கிடந்த சிவப்பு நிறப் பொருளை மிளகாய்ப் பொடி என்று சிறுவர்கள் தவறாகக் கருதி அதை ருசித்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இருப்பினும், முதற்கட்ட விசாரணையில், அந்த பொருள் இரும்பைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் ஒரு இரசாயனம் என்பதும் தெரியவந்தது.

சிறுவர்கள் தற்போது மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# 55 புதிய முதலீட்டுத் திட்டங்களுக்கு இந்த ஆண்டில் இதுவரை அனுமதி!

கொழும்பு, ஒக். 09

இந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை 55 புதிய முதலீட்டுத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

அதேநேரம், 49 விரிவாக்கப்பட்ட திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதில், அதிக எண்ணிக்கையிலான திட்டங்கள் ஆடைகள் மற்றும் புடைவை தொடர்பான திட்டங்களுக்குள் அடங்குகின்றன.

அத்துடன், அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டுத் தொகை 1121 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகம் என தெரிவிக்கிறது.

செப்ரெம்பர் வரையிலான நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் வரவு 787 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை முதலீட்டுச்சபை தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டு ஒதுக்கம் செப்ரெம்பரில் உயர்வு

கொழும்பு, ஒக். 09

இலங்கையின் உத்தியோக பூர்வ வெளிநாட்டு ஒதுக்கம், கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 1.1 வீதம் அதிகரித்து, 6.243 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒகஸ்ட் மாதம் மொத்த ஒதுக்கம் 6.178 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இந்த மொத்த ஒதுக்கீட்டில், சீன மக்கள் வங்கியின் நாணயப் பரிமாற்ற ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களும் அடங்குகின்றன.

சீன நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் உள்ள இந்த 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி, பயன்படுத்துவதற்கான நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# குற்றச்செயல்களில் ஈடுபட்ட 716 பேர் கைது!

கொழும்பு, ஒக். 09

நாடளாவிய ரீதியில் நேற்று பொலிஸாரால் நடத்தப்பட்ட விஷேட சுற்றிவளைப்பின் போது குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 716 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சுற்றிவளைப்பில் 26,920 பேர் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 35 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 284 சந்தேகநபர்கள் இந்த சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபானம் அருந்திய நிலையில் வாகனம் செலுத்திய 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் முறையற்ற விதத்தில் வாகனங்களை செலுத்திய 15 பேர் உட்பட போக்குவரத்து விதிகளை மீறிய 4,123 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



# இலங்கையின் பசுமை வலுசக்தியை மேம்படுத்துவதற்கு போதிய ஆதரவு

## ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி

கொழும்பு, ஒக். 09

இலங்கையின் பசுமை வலுசக்தித்துறையை மேம்படுத்துவதற்கு ஆதரவு வழங்கப்படும் என ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் தலைவர் ஜின் லிக்யுன் தெரிவித்தார்.

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் தலைவர் ஜின் லிக்யுன் மற்றும் அதன் சிரேஷ்ட முகாமைத்துவம் நேற்று முன் தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்த போதே இதனைத் தெரிவித்தது.

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் கடனுதவியின் கீழ் இதுவரை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், இலங்கையுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆதரவு வழங்குவதாக தலைவர் இங்கு தெரிவித்தார்.

அதன்படி, இலங்கையில் வலுசக்தி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதுடன், பசுமை வலுசக்தி, பசுமை போக்குவரத்து வசதிகள் ஆகிய துறைகள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தி எதிர்காலத்தில் ஆதரவு வழங்க நடவடிக்கை எடுகப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வட்டி விகிதங்களைக் குறைத்தல் மற்றும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பொருளாதார ரீதியாக இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை விளக்கிய ஜனாதிபதி, தேசிய பொருளாதாரத்தின் நன்மைகளை நாட்டின் சாதாரண மக்களுக்குக் கொண்டு செல்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்றும் தெரவித்தார்.

அதன்போது, அரச துறையை மறுசீரமைத்து செயற்திறன் மற்றும் வினைத்திறனான அரச சேவையை உருவாக்கும் திட்டங்களை விளக்கிய ஜனாதிபதி, வினைத்திறனான அரச சேவையை வழங்குவதில் செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்படி, மக்களுக்கு சேவைகளை வழங்கும்போது, கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதுடன் சர்வதேச ரீதியான கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (அ)

# இலஞ்ச விசாரணை குழுவின் அரச நியமனத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஒக். 09

இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவுக்கான அரச நியமனத்தை எதிர்த்து, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன், தயாசிறி ஜயசேகர, ஜீவன் தொண்டமான் ஆகியோர் நேற்று முன் தினம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் அண்மையில் வழங்கிய இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகத்தின் நியமனம் குறித்து கேள்வி எழுப்பிய உறுப்பினர்கள் இந்த நியமனம் சுதந்திரத்தையும் நியாயத்தையும் புறக்கணிப்பதாகக் குற்றஞ்சாட்டினர்.

மேலும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன், தயாசிறி ஜயசேகர, ஜீவன் தொண்டமான் ஆகியோர் கருத்து தெரிவித்தபோதிலும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்கள் மௌனமாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு மத்திய அஞ்சல் நிலையத்தில் மிகவிரைவில் கைரேகை இயந்திரங்கள்!

கொழும்பு, ஒக். 09

கொழும்பு மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் தபால் ஊழியர்களின் வருகையை பதிவு செய்வதற்காக கைரேகை இயந்திரங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தபால் மா அதிபர் ருவன் சத்குமார இதனைத் தெரிவித்துள்ளார்.

அனைத்து நிர்வாக அலுவலகங்களிலும் ஏற்கனவே கைரேகை இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாடு முழுவதும் உள்ள அனைத்து மாகாண அலுவலகங்கள் மற்றும் தபால் நிலையங்களுக்கும் இந்த அமைப்பை விரிவுபடுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதுடன் கணக்காய்வாளர் நாயகத்தின் தணிக்கை அறிக்கைகளில் செய்யப்பட்ட பரிந்துரைகளைப் பின்பற்றி இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருப்பினும், பல தபால் தொழிற்சங்கங்கள் சமீபத்தில் மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் கைரேகை இயந்திரங்களை நிறுவுவதை எதிர்த்தும், அதனுடன் தொடர்புடைய பிற குறைபாடுகளை சுட்டிக்காட்டியும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் பாதுகாப்புப்படை வசமுள்ள காணிகள் சுற்றுலாவுக்கு விடுவிக்கப்படும்!

### பிரதியமைச்சர் ருவான் ரணசிங்க

கொழும்பு, ஒக். 09

திருகோணமலை மாவட்டத்தில் பாதுகாப்புப் படைகளின் வசமுள்ள சுற்றுலாவுக்கு பொருத்தமான காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

திருகோணமலை பகுதியிலுள்ள மாபிள் பீச் மற்றும் ஸ்வீட் பே ஆகிய பகுதிகளை மையப்படுத்திய அரசாங்கத்தின் சுற்றுலா திட்டங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

"யுத்த காலத்தில் பல காணிகளில் முப்படை வசமிருந்த நிலையில், அவை படிபடியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை சுவீகரித்துள்ள ஸ்வீட் பே காணி தொடர்பில் வழக்கு உள்ளது. அது தீர்க்கப்பட்டவுடன் விருப்ப கோரல்கள் அழைக்கப்பட்டு, காணிகள் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும்.

அதேநேரம், குறித்த சூழலுக்கு பொருத்தமான நிலையான அபிருத்திக்கு ஏற்றவகையிலான திட்டங்களுக்காகவும் அந்த காணிகளை விடுவிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

முப்படையினர் வசம் பல காணிகள் உள்ளன. அவற்றில் விசேடமாக சுற்றுலா திட்டங்களுக்கு வழங்கப்படக்கூடிய காணிகளை உரிய அமைச்சுடன் கலந்துரையாடி விடுவிப்பதற்கும், அவற்றை பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது" என சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்தார்.



# முத்து நகர் காணி விடயத்தில் பிரதியமைச்சர் இரட்டைவேடம்

### ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

திருமலை, ஒக். 09

திருகோணமலை மாவட்ட முத்து நகர் விவசாயிகளின் காணி அபகரிப்புக்குட்பட்டதையடுத்து, இப்பகுதியின் பிரதியமைச்சர் இரட்டை வேடம் போட்டு வருவதாக ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளர் மிப்லால் மௌலவி குற்றம்சாட்டியுள்ளார்.

திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக முத்து நகர் விவசாயிகளின் காணி மீட்புக்கான சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இப் போராட்டக்காரர்களுடன் சந்திப்பை மேற்கொண்டு போராட்டத்துக்கு ஆதரவளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மாவட்டத்தை சேர்ந்த பிரதியமைச்சர் அரசாங்கம் பக்கம் இருக்கும் போது ஒரு நிலைப்பாடு, மக்களின் பக்கம் இருக்கும் போது வேறு ஒரு நிலைப்பாடு என இரட்டை வேடம் போட்டு வருகிறார்.

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் தற்போது அநீதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். புல்மோட்டை தொடக்கம் குச்சவெளி மீனவர் பிரச்னை, நில உரிமை விவகாரம் என தொடங்கிய போராட்டம் இப்போது முத்து நகர் வரை சென்றுள்ளது. கடந்த கால அரசியல்வாதிகள் பொய் வாக்குறுதிகளை வழங்கி முஸ்லிம் மக்களின் வாக்குகளை பயன்படுத்திவிட்டனர்.

தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு முஸ்லிம் சமூகமே ஆதரவளித்தது. எனவே ஜனாதிபதி நேரடியாக தலையிட்டு முத்து நகர் மக்களின் பிரச்னைக்கு தீர்வு வழங்க வேண்டும். ஊழல் இனவாதம், போதைப் பொருள் தடுப்பு உள்ளிட்ட விடயங்களில் செயல்படும் அரசாங்கம், முத்து நகர் விவசாயிகளுக்கு நியாயம் வழங்க வேண்டும். கிழக்கு மாகாண சிவில் சமூகம், உலமாக்கள், பள்ளிவாசல்கள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்த அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கவேண்டும்.

எதிர்வரும் ஜும்ஆ தொழுகையின் பின்னர் அனைத்து பள்ளிவாசல்களும் இணைந்து உலமா சபை வழியாக மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். மேலும் சுமார் 10 ஆயிரம் கையொப்பங்களை சேகரித்து ஜனாதிபதியிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.






# நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலைக்கு இஸ்லாமிய கலாசார போட்டியில் பதக்கங்கள்

அம்பாறை, ஒக். 09

மாகாண மட்ட இஸ்லாமிய கலாசார போட்டி கடந்த திங்கட்கிழமை மூதூர் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் கல்முனை கல்வி வலய நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலை மாணவர்கள் ஈத் தக்பீர் கூறும் பிரிவில் தங்கப்பதக்கத்தை பெற்று தேசியமட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் உயர்தரப் பிரிவு மாணவிகளுக்குரிய அல் ஹிகாயா வல்பைத் நிகழ்ச்சியில் வெள்ளிப் பதக்கத்தையும், அரபு எழுத்தணி போட்டியில் வெண்கலப்பதக்கத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (அ)

# கஞ்சாவுடன் இருவர் கைது!

மட்டக்களப்பு, ஒக். 09

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காதரியா கடற்கரை பிரதேசத்தில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய உபபொலிஸ் பரிசோதகர் யூ.எல்.எஸ்.ஆப்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்கு சென்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் விற்பனைக்காக வைத்திருந்த 18 கிராமும் 890 மில்லி கிராம் கேரளா கஞ்சாவையும் அவரிடமிருந்த மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியிருந்தனர்.

இதேவேளை, மற்றைய சந்தேக நபரிடமிருந்து மூன்று கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை கடந்த செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எதிர் வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரனைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஓட்டமாவடியில் கார் மோதி வயோதிபர் ஒருவர் மரணம்!

மட்டக்களப்பு, ஒக். 09

ஓட்டமாவடி - நாவலடி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று புதன்கிழமை ஓட்டமாவடி - நாவலடி இராணுவ முகாமுக்கு முன்பாக வைத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி பகுதியில் இருந்து வயல் வேலைக்காக சைக்கிளில் பயணித்த நபர் மீது அவ்வீதியால் வந்த கார் மோதியதில் வயோதிபர் மரணமடைந்துள்ளார்.

இந்த விபத்தில் மரணமடைந்த நபர் ஓட்டமாவடி - 1 மர்கஸ் பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த 63 வயதுடைய சீனி முகம்மது முகம்மது இப்ராகீம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணமடைந்த நபரின் உடல் வைத்திய பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கிழக்கு பாலர் பாடசாலை கல்வி பணியக காரியாலயத்தை மட்டக்களப்பிலிருந்து அகற்றுவதை எதிர்த்துப் போராட்டம்!

காரைதீவு, ஒக். 09

கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியக தலைமை காரியாலயத்தை மட்டக்களப்பிலிருந்து அகற்றுவதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பகல் அக்கரைப்பற்றில் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை வலயம், சம்மாந்துறை வலயம், அக்கரைப்பற்று வலயம், திருக்கோவில் வலயம் ஆகியவற்றின் முன்பள்ளி அபிவிருத்தி ஒன்றியத்தினால் இப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப் போராட்டம் அக்கரைப்பற்றிலுள்ள அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலை கல்விப் பணிமனைக்கு முன்பாக இடம்பெற்றது.



இதில் நூற்றுக்கு மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கைகளில் பதாகை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி தங்களுடைய எதிர்ப்பை வெளியிட்டனர்.இதில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (அ)

# மலையக மக்களுக்கான இந்திய உதவி தொடரும்!

கொழும்பு, ஒக். 09

இலங்கைக்கான இந்திய தூதுவருக்கும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம் மற்றும் வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்திய வீட்டுத் திட்டம், மலையக மக்களுக்குரிய உரிமைகள் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

மலையகச் சமூகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கான முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கப்படும் என இதன்போது இந்திய தூதுவர் உறுதியளித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்கெடுப்பை...

பிரச்னைகள் எழுந்துள்ளன. அன்று பொலிஸ் ஆணைக்குழு வேண்டும். அது சுயாதீனமாக இருக்க வேண்டும் என்று கூறிய நீங்கள் இப்போது சுயாதீனத்துவத்தை நீக்கி அதன் அதிகாரத்தை பொலிஸ்மா அதிபருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கிறீர்கள்.

நீங்கள் கடற்படைத் தளபதியை கைது செய்துள்ளீர்கள். விடுதலைப் புலிகளின் புலனாய்வில் இருந்த ஒருவர் வழங்கிய சாட்சியத்துக்கு அமையக் கைதுசெய்துள்ளீர்கள். குற்றப்புலனாய்வுக்கு ஏற்றவாறு வாக்குமூலங்கள் பதியப்படுகின்றன. இவ்வாறான நிலைமையிலேயே பொலிஸ் ஆணைக் குழுவை நீக்கி பொலிஸ்மா அதிபரின் கீழ் அதிகாரங்களை கொண்டு வந்து அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முயற்சிக்கப்படுகின்றது.

பொலிஸ்மா அதிபர் சில விடயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, கடந்த காலங்களில் அரசாங்கத்துக்காகக் கடைக்கு சென்ற பொலிஸ்மா அதிபர்களுக்கு என்ன நடந்தது என்று சிந்திக்க வேண்டும். பொலிஸாரைப் பயன்படுத்தி தமது அரசியல் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக் கொள்ளவே அரசாங்கம் முயற்சிக்கிறது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை பணிமனையில் எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைய பொலிஸ் சேவையை மாற்றியமைக்ககூடாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் இலங்கை விவகாரம் தொடர்பில் வாய்மூலம் எதிர்ப்பு தெரிவித்த போதும் வாக்கெடுப்பை கோரவில்லை. வாக்கெடுப்பை கோருவதற்கு அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இல்லையா? நாடுகள் பல இலங்கைக்கு ஆதரவாக உள்ளன. யாரை நீங்கள் மகிழ்விக்கப் போகிறீர்கள்? புலம்பெயர் தமிழ் அமைப்புக்களையா அல்லது விடுதலை புலிகளின் ஆதரவாளர்களையா? ஐ.நா.விவகாரத்தில் இரட்டை வேடம் அணிவதை அரசாங்கம் தவிர்க்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## ஏ9 வீதியை...

வீதியை மறித்தனர். இதனால் சிறிது நேரம் அந்தப் பகுதியூடாக போக்குவரத்து தடைப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மயூரன் போராட்ட இடத்துக்கு வந்தார். இதன்போது, மக்கள் தமது கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

தமது பகுதியில் இனிமேல் குப்பை கொட்டுவதற்கு வாகனங்கள் வந்தால் அந்த வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு நாங்கள் பொறுப்பல்லர் என இதன் போது எச்சரித்தனர். தொடர்ந்து, தவிசாளரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

தொடர்ந்து, அங்கிருந்து பேரணியாக சென்ற போராட்டக்காரர்கள் ஆளுநர் செயலகத்தில் மனு ஒன்றையும் கையளித்தனர்.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்-

உலகமெங்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக மக்கள் போராடி வருகின்றனர். அரியாலையூர் மக்களாகிய நாமும் நமது ஊரைப் பாதுகாப்பதற்காக நமது அழகிய ஊரின் நிலம், கடல், நீர்வளம், தூய காற்று போன்ற இயற்கையின் கொடைகளை காப்பாற்றுவதற்காகப் போராட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

நல்லூர் பிரதேச சபை, எமது ஊர்மக்களுடன் எந்தவகையிலும் கலந்து பேசாது சூழலை மாசுபடுத்தக்கூடிய குப்பைகளை எமது ஊரில் வீசும் திட்டத்தை ஆரம்பித்திருப்பது எமது ஊர் மக்களால் மட்டுமல்ல இயற்கையையும் மனிதத்தையும் நேசிக்கும் எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாத அநீதியாகும்.

இயற்கைப் பசளை உற்பத்தி என்ற பெயரில் ஏமாற்றுத்தனமாக எந்தவகையிலும் வகைப்படுத்தப்படாத - மக்காத குப்பைகளை எமது ஊரில் கொட்டி எமது ஊரை குப்பைமேடாக மாற்றும் முயற்சியை நல்லூர் பிரதேச சபை உடனடியாகக் கைவிடவேண்டும் - என்றனர்.(அ-ஐ)

## மின்சார....

இலக்காகக் கொண்டே இலங்கை மின்சார சபையை 4 நிறுவனங்களாக மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், மின்சார கட்டணம் தொடர்பில் இதுவரையில் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை. பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுால் இது குறித்து மக்கள் கருத்துக் கோரல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்பதை ஆணைக்குழு இன்னும் அறிவிக்கவில்லை. எனவே, மின் கட்டணம் குறைக்கப்படுமா அல்லது அதிகரிக்கப்படுமா என்பதைத் தற்போது கூற முடியாது. முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்துறை சார்ந்தவர்களின் கோரிக்கைகளுக்கு அமையவே தீர்மானம் எடுக்கப்படும். எனவே, தீர்மானம் எதுவாக இருந்தாலும் அது மின்சார ஊழியர்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பாக அமையாது.

அரசாங்கத்தின் தீர்மானங்களை ஏற்க முடியாதவர்களுக்கு நாம் ஏற்கனவே சில தெரிவுகளை வழங்கியிருக்கிறோம். எனவே, அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் வேறு தொழிலை தேடிக் கொள்ளலாம் -என்றார். (ஐ)

## இலங்கையை....

ஊடகம் ஒன்றின் விசேட செய்தி பார்வையில் அளித்த நேர்காணலிலேயே மீனாட்சி கங்குலி மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கையுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ள அவுஸ்திரேலியா காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் தனது உறவைப் பயன்படுத்தி இலங்கையை சர்வதேச கண்காணிப்பை அனுமதிக்க அழுத்தம் கொடுக்க முடியும் என்றும் கூறினார்.

அந்தச் செய்திப் பார்வையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, உலகில் இரண்டாவது பெரிய எண்ணிக்கையிலான கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் இலங்கையிலேயே பதிவாகியுள்ளன. 1980கள் முதல் குறைந்தது ஒரு இலட்சம் காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை மதிப்பிட்டுள்ளது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்ததிலிருந்து, நாட்டின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் 20இற்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனினும், இந்தக் கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து நடததப்பட்ட விசாரணைகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அர்த்தமுள்ள பதில்களை அரிதாகவே வழங்கியதால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் குழப்பத்திலும் துயரத்திலும் மூழ்கியுள்ளன.

சமீபத்திய நிகழ்வாக, கடந்த 4 மாதங்களாக யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதியான அரியாலையில் அகழ்வாய்வாளர்கள் இதுவரை 240 மனித என்புக கூடுகளைக் கண்டுபிடித்துள்ளனர். இவற்றுள் புதிதாகப் பிறந்த குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் என்புக்கூடுகளும் அடங்கியுள்ளன. அரியாலை புதைகுழி கண்டுபிடிப்பு, இலங்கையில் கட்டாயமாக காணாமல் போனவர்கள் குறித்து சர்வதேச விசாரணைகளுக்கான புதிய கோரிக்கைகளுக்கு வழிவகுத்துள்ளது.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை, இக்கூட்டுப் புதைகுழி கண்டுபிடிப்புகள், தோல்வியடைந்த பொறுப்புக்கூறல் மற்றும் தீர்க்கப்படாத சோகத்தின் கதையைத் தொடர்வதாக உள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், "மனிதப் புதைகுழிகளை முறையாக விசாரித்து குற்றவாளிகள் மீது வழக்குத் தொடரத் தேவையான தடயவியல் வளங்கள் மற்றும் சட்ட கட்டமைப்புகள் இலங் கையில் இல்லை", என்று சுட்டிக்காட்டி னார் என்றும் அவுஸ்திரேலிய ஊடகம் தெரிவித்துள்ளது.

# "விசாரணைகளை குழப்புவதே எதிர்க்கட்சிகளின் நோக்கம்!"

கொழும்பு, ஒக். 09

ஊழல், மோசடிகள் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு ஒவ்வொருவராகக் கைது செய்யப்படும் இந்த சந்தர்ப்பத்தில், ஆணைக்குழுவின் பணிப்பாளர் மீது எதிர்க்கட்சிகள் விமர்சனங்களை முன்வைக்கின்றன. முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளை குழப்புவதே அவர்களின் நோக்கமாகும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலஞ்சம், ஊழல் தொர்பான விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் நியமனம் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு அவரால் பதிலளிக்கப்பட்டுள்ளது. செயல்பாட்டு ரீதியில் அவர் அவரது நடவடிக்கைகளை நாட்டுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

எனவே, இவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துக் கொண்டிருப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லை. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு இது குறித்த சட்டம் தொடர்பில் அனுபவம் இருப்பதாக நம்புகின்றோம்.

அதற்கமைய பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு சபையின் ஊடாக இடம்பெற்ற தேர்வு மோசடியானது என்றால், அந்த நியமனத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடியும்.

அதுவே சரியான அணுகலாகும். அதனை விடுத்து ஆங்காங்கு விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டிருப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லை.

ஊழல், மோசடிகள் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு ஒவ்வொருவராக கைது செய்யப்படும் இந்த சந்தர்ப்பத்தில், இலஞ்ச, ஊழல் தொர்பான விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் மீது அவதூறு பரப்புவதன் ஊடாக, கம்மன்பில போன்றோரின் தேவை என்ன என்பது தெளிவாகிறது. - என்றார். (ஐ)

## மன்னார்...

தீர்க்கப்பட வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன என்று கலந்துரையாடப்பட வேண்டும். எங்களுக்கு என்ன தேவைகள் உள்ளன என்பது குறித்து கலந்துரையாட முடியும். எனவே கலந்துரையாடல் மூலம் இந்தப் பிரச்னைக்கான முடிவை பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (ஐ)

## வடக்கு...

அந்த சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில், மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"தற்போது வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள சேவையின் தேவை கருதிய இடமாற்ற சபையை அரசியல் தலையீடு காரணமாக இலங்கை ஆசிரியர் சங்கம் புறக்கணித்திருந்தது. இந்தநிலையில் குறித்த இடமாற்றப் பட்டியல் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரசன்னமின்றி வெளியிடப்பட்டுள்ளது. சேவையின் தேவை கருதிய இடமாற்றம் என்ற பெயரில் ஆசிரியர்கள் பழிவாங்கப்பட்டுள்ளனர்.

"ஏலவே, வெளிமாவட்ட சேவையையும் வெளிமாவட்ட சேவையை ஒத்த சேவையையும் தமது சேவை நிபந்தனை காலத்துக்கு மேலதிகமாகவும் பூர்த்தி செய்துள்ள பலரின் பெயர்கள் இடமாற்றப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இது தற்செயலாகவோ தவறுதலாகவோ இடம்பெற்ற விடயமல்ல.

"வட மாகாண கல்வி பதில் பணிப்பாளராக இருந்து தற்போது மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக பணியாற்றும் பிரட்லி என்னும் அதிகாரியின் வட மாகாண கல்வியை குழப்பும் செயல்பாடே இதுவாகும். குறிப்பிட்ட ஆசிரியர் சங்கமொன்றின் அரசியல் நிகழ்ச்சிநிரலுக்குள் நின்று கொண்டு வேண்டுமென்றே பழிவாங்கும் முகமாக வெளிமாவட்ட சேவைகளையும் அதற்கு ஒத்த சேவைகளையும் பூர்த்திசெய்தோரும் குறித்த இடமாற்ற பட்டியல்களுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

"அரசியல் நிகழ்ச்சி நிரலில் நடைபெற்ற குறித்த இடமாற்றங்கள் நிறுத்தப்படவேண்டும். குறித்த இடமாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுடனான தொழிற்சங்க செயல்பாடுகள் குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள கிளீன் பீல்ட் விளையாட்டு கழக மண்டபத்தில் நடைபெறும் - என்றுள்ளது. (ஐ)

## ஜெனிவா...

இந்தத் தகவலை அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஐ)

## 54ஆயிரம்...

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்தபோதே பாதுகாப்பு பிரதி அமைச்சர் இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

முப்படைகளிலும் இருந்தும் 54 ஆயிரத்து 87 பேர் முறைப்படி விலகவில்லை. இராணுவத்தை சேர்ந்த 385 அதிகாரிகளும் 47 ஆயிரத்து 265 இதர பதவி நிலையினரும் பணிக்கு திரும்பவில்லை.

இதேபோன்று விமான படையை சேர்ந்த 46 அதிகாரிகளும் 3 ஆயிரத்து 396 இதர பதவிநிலையினரும் கடற்படையை சேர்ந்த 87 அதிகாரிக ளும் 3 ஆயிரத்து 108 இதர பதவி நிலையினரும் பணிக்கு திரும்பவில்லை.

இவர்களில் இராணுவத்தை சேர்ந்த 232 அதிகாரிகளும் 93 இதர பதவி நிலையினரும் கடற்படையை சேர்ந்த 64 அதிகாரிகளும் 19 இதர பதவிநிலையினரும் விமானப் படையை சேர்ந்த 15 அதிகாரிகளும் 5 பிற பதவி நிலையினரும் வெளிநாடுகளில் வாழ்கின்றனர் என்றும் பிரதி அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

## நாட்டில்....

ஆயிரம் நோயாளிகள் மனநல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர். தற்கொலைக்கு மனநல பாதிப்பே முக்கிய காரணம். பலர் மனநலனில் ஆர்வம் காட்டுவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலக மனநல தினத்தை முன்னிட்டு இலங்கை மன்றத்தின் கேட்போர்கூடத்தில் நடத்திய விசேட சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்தச் சந்திப்பில் பங்கேற்ற சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி கூறுகையில்,

"நமது நாட்டில் மனநலம் தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பை நிறுவுவதில் கடுமையான சிக்கல் - சிரமம் காணப்படுகிறது. எனவே, அவசர சிகிச்சை நடைமுறைகள் போலவே மனநலம் சார்ந்த சிகிச்சைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

"நமது நாட்டில் மனநலம் தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பை நிறுவுவதில் கடுமையான சிக்கல் மற்றும் சிரமம் காணப்படுகிறது. எனவே அவசர சிகிச்சை நடைமுறைகள் போலவே மனநலம் சார்ந்த சிகிச்சைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்" - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# நாடு முழுவதும் தொடர்ந்து பன்றிக் காய்ச்சல் அபாயம்!

கொழும்பு, ஒக். 09

இலங்கையின் பல பிரதேசங்களில் கண்டறியப்பட்ட ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் மேலும் பரவுவதைத் தடுப்பதற்காக, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின்படி, நாட்டின் அனைத்து மாவட்டங்களும் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் அபாயம் உள்ள பகுதிகளாகவும், பன்றிகள் நோய் அபாய விலங்குகளாகவும் 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிப்பு மூன்று மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

நிலவும் நோயின் தன்மையை பொறுத்து இந்த கால அவகாசம் நீடிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவிப்பின் மூலம், ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் வகையில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது:-

நோய்த் தொற்று உள்ள பகுதிகளில் இருந்து பன்றிகள், பன்றி இறைச்சி மற்றும் பன்றி தீவனங்களை கொண்டு செல்லுதல், வாங்குதல், விற்பனை செய்தல்.

பன்றி வளர்ப்புப் பண்ணைகளுக்கு இடையே பன்றிகளை இடமாற்றம் செய்தல்.

நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்ட பண்ணைகளில் இருந்து பன்றிகளை விற்பனைக்கு உட்படுத்துதல்.

இந்த கடுமையான கட்டுப்பாடுகள், நாட்டின் பன்றி வளர்ப்புத் தொழிலையும் பொது சுகாதாரத்தையும் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

# நாடு முழுவதும் மின் தடை ஏற்படக்கூடிய சாத்தியம்!

## ஆனந்த பாலித எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 09

மின்சார பொறியாளர்கள் சங்கம் முன்னெடுத்துள்ள போராட்டம் காரணமாக நாடு முழுவது மின் தடை ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இணைப்பாளர் ஆனந்த பாலித எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த முடிவு தன்னிச்சையாக எடுக்கப்படவில்லை எனவும், அனைத்து தொடர்புடைய அதிகாரிகளுக்கும் எழுத்துபூர்வமாக அறிவித்த பின்னரே எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்படி, "அனைத்து பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகளும் நிலையான எட்டு மணி நேர வேலை காலத்தில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

அதற்கு மேல், எவ்விதமான அவசரமாக இருந்தாலும், பராமரிப்பு அல்லது பழுது பார்க்கும் பணிகள் முன்னெடுக்கப்பட மாட்டாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பாக ஆரம்பித்த தொழிற்சங்கத்தின் போராட்டம், பின்னர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சிடமிருந்து எந்த பதிலும் இல்லை கிடைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்களில் சமநிலை இல்லை எனவும் இந்த நிலை நீடித்தால் நாடு விரைவில் மின் தடையை சந்திக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# காணாமற்போனோர் விசாரணை; இலங்கையில் முன்னேற்றமில்லை

## ஐக்கிய நாடுகள் சபையின் குழு கவலை

கொழும்பு, ஒக். 09

**காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை கையாள்வதில் இலங்கை முன்னேற்றம் இல்லாதது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் குழு கடுமையான கவலையை வெளிப்படுத்தியுள்ளது.**

இலங்கையின் காணாமற்போனோர் அலுவலகத்தின் செயல்திறனும் இதில் அடங்கும்.

குறித்த அலுவலகம் காணாமல் போனோர் தொடர்பான 17,000 முறைப்பாடுகளில் ஒரு பகுதியை மட்டுமே கண்டறிந்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகளின் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில், வலிந்து காணாமற்போனவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் குழு, கட்டாயமாக காணாமல் போனதாகக் கூறப்படும் விசாரணை, வழக்குத் தொடுப்பதில் முன்னேற்றம் இல்லாதது அதிக அளவிலான தண்டனை விலக்கு செயல் என்றும் குறிப்பிட்டது.

இலங்கை மீதான மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அதிகாரத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு திங்களன்று நிறைவேற்றிய ஒரு நாளுக்குப் பின்னர் வலிந்து காணாமற்போனவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் குழுவின் இந்த அறிக்கை வந்துள்ளது. (அ)

# தாஜுதீன் படுகொலை வழக்கு விசாரணையில் புதிய திருப்பம்

கொழும்பு, ஒக். 09

ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் கஜ்ஜா எனப்படும் அருண விதானகமகே பாதுகாப்பு அமைச்சில் பணிபுரிந்ததாகத் தகவல்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி ரக்பி வீரர் வசீம் தாஜ/தீன் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் காரில் அவரை பின்தொடர்ந்த குழுவில் கஜ்ஜாவும் இருந்தார் என அண்மையில் இடம்பெற்ற குற்றப் புலனாய்வுத் திணைக்கள விசாரணைகளில் தெரியவந்தது.

தாஜுதீன் கொலை செய்யப்பட்ட நாளில் கஜ்ஜா தங்கியிருந்த இடம் குறித்தும் தொலைபேசி தரவு பகுப்பாய்வு அறிக்கையை ஆய்வு செய்யும் வகையிலும் தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கஜ்ஜாவும் அவரின் இரண்டு பிள்ளைகளும் கொலை செய்யப்படுவதற்காக, தாமே துப்பாக்கியை வழங்கியதாக பொதுஜன பெரமுனவின் முன்னாள் பிரதேச சபை வேட்பாளர் சம்பத் மனம் பேரி ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

எனவே, கஜ்ஜாவின் கொலையானது, கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கொலைகளை மறைக்கும் முயற்சியாக இருக்கலாம் எனப் புலனாய்வாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், அவரை 90 நாட்கள் மேல் மாகாண வடக்கு குற்ற விசாரணைப் பிரிவின் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதாக பொலிஸார் நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

குறித்த விசாரணைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவர்கள் இதனை அறிவித்துள்ளனர்.

அத்துடன், மீதெனிய பகுதியில் போதைப்பொருள் வலையமைப்பு தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காகச் சந்தேகநபரைத் தடுத்து வைத்து விசாரணை செய்வதாக, மேல் மாகாண வடக்கு குற்ற விசாரணை பிரிவினர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர். (அ)

# இலங்கையில் மிகவும் கஷ்டமான 3000 பாடசாலைகள் அடையாளம்!

கொழும்பு, ஒக். 09

நாட்டில் உள்ள மொத்தம் 10,102 பாடசாலைகளில் சுமார் 3,000 பாடசாலைகள் மிகவும் கஷ்டமான பாடசாலைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிலையில், மாணவர் எண்ணிக்கை 50 இற்கும் குறைவாக உள்ள பாடசாலைகளைத் தற்காலிகமாக மூட அரசாங்கம் தயாராகி வருவதாகவும், அந்த பாடசாலைகளில் ஒருவருக்கான செலவு மிகவும் அதிகமாக இருப்பதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

கல்வி அமைச்சு கடந்த ஏப்ரல் மாதம் "பாடசாலை கட்டமைப்புக்கான சுற்றறிக்கை மற்றும் வழிமுறைகள்" என்ற பெயரில் புதிய சுற்றறிக்கையை வெளியிட்டது.

அதில், எந்த ஒரு பாடசாலையையும் நடத்தக் குறைந்தபட்சமாக 50 மாணவர்கள் இருக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த சுற்றறிக்கையின்படி, ஒரு பாடசாலையின் மொத்த மாணவர் எண்ணிக்கை 50 இற்கு குறைவாக இருந்தால், அதிகபட்சம் 5 கிலோமீற்றர் தூரத்துக்குள் உள்ள மற்றொரு பாடசாலையுடன் இணைக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தனது கருத்தைத் தெரிவித்தார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரே மாதிரியான பொதுத்திட்டம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்றும், அதனைப் பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைத்து முன்னெடுக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். (அ)

# பந்தயம், சூதாட்ட வரி உயர்வு

கொழும்பு, ஒக். 09

பந்தயம் மற்றும் சூதாட்டத்தின் மீதான வரியை அதிகரிப்பதுடன், இலங்கை பிரஜைகளுக்கான கசினோ நுழைவுக் கட்டணத்தை இரு மடங்காக உயர்த்துவது தொடர்பான திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த புதிய வரி அதிகரிப்புகள் நாட்டின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

குதிரைப் பந்தயப் பணயக்காரர் அல்லது சூதாட்டத் தொழிலை நடத்தும் அனைத்து நபர்களிடமிருந்தும் அறவிடப்படும் மொத்த சேகரிப்பு மீதான அறவீடு தற்போதுள்ள 15 வீதத்திலிருந்து 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய 18 வீத வரி 2025 ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

அதேநேரம், இலங்கை பிரஜைகள் சூதாட்ட விடுதிகளுக்கு (கசினோ) நுழைவதற்குச் செலுத்தவேண்டிய நுழைவு அறவீடு 100 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னர் அறவிடப்பட்ட 50 அமெரிக்க டொலர் என்ற கட்டணம் தற்போது 100 அமெரிக்க டொலராக உயர்த்தப்பட்டுள்ளது.

அரச வருவாயை வலுப்படுத்தவும், நாட்டின் நிதிச் சவால்களை சமாளிக்கவும் இந்த வரி மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# வட மாகாணம் முழுவதும் லஞ்சீற் பாவனைக்கு தடை!

யாழ்ப்பாணம், ஒக். 09

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வட மாகாணம் முழுவதும் லஞ்சீட் பாவனைக்குத் தடை விதிக்கவும், மாற்றீடாக வாழை இலையை பயன்படுத்தவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த விடயங்கள் தொடர்பில் தீர்மானத்தை நிறைவேற்றாத உள்ளூராட்சி மன்றங்கள் அதனை நிறைவேற்ற வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஒருவழிப் பாதைகளை அறிமுகப்படுத்தல், கனரக வாகனங்களின் பாவனைக்கு நேரக்கட்டுப்பாடுகளை விதித்தல் ஆகியனவற்றைச் செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் மழை காலத்துக்கு முன்னர், வெள்ளம் வடிந்தோடுவதற்கு தடையாக அமைந்துள்ள சட்டவிரோதக் கட்டுமானங்களை உடனடியாக அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் கவனம் செலுத்தவேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் கற்கின்ற தனியார் கல்வி நிறுவனங்கள் உரிய சுகாதார வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக அவற்றைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org